# திராவிடன்

ஆசிரியர்
என். வி. நடராசன்

R. T. ARASU


# கோழைகள்?

தலையங்கம் :

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படைக் கொள்கையை, ஆளும் கட்சியினரும், அரசினரும், நியாயமான வாதத்தால், அனுபவ வாயிலான எடுத்துக்காட்டுகளால் சிறிதுகூட அசைக்க முடியவில்லை.

இன்னும் சொல்லப் போனால் ஆளுங்கட்சியினர் தம்மிடம் மடிபிச்சை ஏந்தி நிற்கும் சில்லரைக் கட்சிகளை ஏவி விட்டு, திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடுஎன்ற பேரில் நாடெங்கும் "எதிர்ப்பு" நடத்தியும் கழகத்தின் கொள்கையைத் தடுக்க முடிய வில்லை. அதற்கு பதிலாக மக்களின் உள்ளத்தில் கழகக் கொள்கை வேரூன்றிவிட்டது.

இந்நிலையில் தங்களுக்குள்ள அதிகார பலத்தைக் காட்டி, எல்லோருக்கும் பொதுவான சட்டத்தை, தங்களது கட்சியின் ஆசாபாசத்துக்கு இரையாக்கிக் கொண்டு அதன் மூலமாக கழகத்தின் அடிப்படைக் கொள்கையை, ஏன் கழகத்தையே அழித்தொழிக்க முனைந்து விட்டது ஆளுங்கட்சி!

மகாத்மா காந்தியின் அறவழியை அறவே புறக்கணித்து விட்டு மிருகபலத்தைக் கொண்டு கழகத்தை அழிக்க முற்பட்டுவிட்டது காங்கிரஸ் ஆட்சி என்று கூறின் மிகையாகாது.

காங்கிரஸ் ஆட்சிக்கு சனநாயகத்தில் நம்பிக்கையிருக்குமானல், சனநாயக முறைப் படியே மக்களின் கருத்துக்கு மதிப்பளிக்க வேண்டும் என்ற பண்பு, இருந்திருக்குமானல், நாட்டுப் பிரிவினையைப் பற்றி பொதுத் தேர்தல் மூலமாக முடிவறிய முன்வந்திருக்கும். கழகத்தின் தனிப் பெருந் தலைவர் அறிஞர் அண்ணு அவர்கள் பல முறை இதனை வலியுறுத்தியும் வேண்டுகோள் விடுத்தும் அதற்குத் துணிவில்லாத, காங்கிரஸ் ஆட்சி, மக்கள் மன்றத்தின் தீர்ப்புக்கு முன் நிற்பதற்கு அஞ்சி ஓடும் நிலையில் தன்னிடம் ஒப்படைக்கப் பட்டுள்ள புனிதமான சட்டத்தை, தனது ஆத்க்க வெறிக்கு, கையாலாகாத தன்மைக்கு ஆயுதமாக்கிக்கொண்டு, கழகத்தை அழித்துவிட்டேன் பார் பார் என்று கொக்கரிக்கிறது.

அரசியல் விவேகம் உடையவர்கள் காங்கிரஸ் ஆட்சியின் இந்த முறைகெட்ட போக்கினை, ஆண்மையுடையது என்று கூறமாட்டார்கள். இதைத்தான் வடிகட்டிய கோழைத்தனம் என்று கூறுவார்கள்.

சனநாயக நாட்டில் கொள்கைக்கு கொள்கை—வாதத்திற்கு வாதம் என்று எதிர்த்துப் போராடுவோர்தான் ஆண்மையும் விவேகமும் படைத்தவர்களாவர். வாதத்தில்-நடைமுறையில் தோல்வி காண்போர், எதிர்பாராவிதமாகத் தங்களிடம் சிக்கியுள்ள ஆட்சிபீடத்தின் பலத்தைப் பிரயோகித்து எதிர்க்கட்சியை அடக்குவது மன்னிக்கமுடியாத குற்றமும், கடைந்தெடுத்த கோழைத்தனமுமாகும்.

எனவே திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அடக்குமுறைக்கு அஞ்சி தங்களது அடிப்படையைவிட்டுக் கொடுத்துவிட்ட கோழைகள் என்று ஆளுங்கட்சியினரும் அவர்தம் அடிவருடிகளும் கூப்பாடுபோடுவதில் அர்த்தமில்லை. அதைக் கழகத் தோழர்கள் பொருட்படுத்த வேண்டியது மில்லை.

அறிஞர் அண்ணு அவர்கள் கழக சார்பில் வெளியிட்டுள்ள அறிக்கைகளின் வாயிலாக எடுத்துக்காட்டியிருப்பதைப்போல, காங்கிரஸ் ஆட்சியினர் தாம் விரித்த வலையில் கழகம் சிக்கி அழியவில்லையே என்று அங்கலாய்த்து ஒப்பாரிவைக்கும் இழிநிலைக்குத்தான் அவர்களது தூற்றுதலை நாம் எண்ணவேண்டியிருக்கிறது. ஆதலின் 'இவ்வாறு ஒப்பாரிவைப்பதில் முன் நிற்கும் காமராசருக்கு நமது அனுதாபம் உரித்தாகட்டும்.

தி. மு. கழகத்தினர் பிரிவினையைக் கைவிட்டுவிட்டனர், செச்சே! பயந்தாங்கொள்ளிகள்—என்று காங்கிரஸ் கட்சியினர் கூச்சல் போடுவதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனல் பிரிவினையைக் கொள்கையாகக் கொண்டிருக்கும் சில கட்சிகளும், கும்பலில் கோவிந்தா போடுவதைப்போல ஆளுங்கட்சியினருடன் கூறிக்கொண்டு கூப்பாடு போடுவதற்கு வெட்கப்படவேண்டாமா?

தி. மு. கழகத்தினர் பயந்துவிட்டனர்—கோழைகள் என்று கொக்கரிக்கும், இந்தக் கட்சிக்காரர்களைத் திருப்பி மக்கள் கேட்கமாட்டார்களா? சூரப்புலிகளே, உங்கள் கட்சியின் கொள்கை என்ன; நீங்கள் தனிநாட்டு உரிமைக்கு வீரத்துடன் போராடுவீர்களா? அல்லது அரசினருடன் சேர்ந்து கொண்டு தி. மு. கழகத்தை அர்த்தமில்லாமல் கேலி செய்யும் இழிச்செயலில் ஈடுபடப் போகிறீர்களா என்று கேட்கமாட்டார்களா?

எனவே, நாட்டுப் பிரிவினையை கொள்கையாகக் கொண்டுள்ள கட்சிகள், தி. மு. கழகத்தை அரசியல் தெளிவின்றி கேலி பேசி பிழைத்துவிடலாம் என்று மனப்பால் குடிக்கவேண்டாம். விரைவில் அக்கட்சிகளை நோக்கி மக்கள் விடுக்கயிருக்கும் கண்டனக் கணைகளையும் அக்கட்சிகள் மறந்துவிடவேண்டாம்.

இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியின் காரணமாக கழகத்தில் பிளவு ஏற்படும், இந்தச் சந்தடியில் நமது கட்சியை வலுப்படுத்திக் கொள்ளலாம் என்று சில கட்சிகள் நாக்கைத் தொங்கவிட்டுக்கொண்டிருக்கின்றன.

கழகத் தோழர்களின் ஒருமித்த கருத்தையும், ஏறத்தாழ கழக ஆதரவாளர்களின் அனுமதியையும் பெற்றே அண்ணு அவர்கள், கழகத்தின் எதிர்கால பணியினைப்பற்றி கருத்து அறிவித்துவருகிருர்கள் என்பதை அக்கட்சிகள் உணரவேண்டும். எனவே, கழகத்தில் பிளவு ஏற்படும் என்று மனப்பால் குடிப்பவர்கள் யாராயினும் அவர்களைவிட அப்பாவிகள் வேறு யாரும் இருக்கமுடியாது என்பதை காலம் உணர்த்தத்தான் போகிறது.

கழகத்திற்கு இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியைப்போல உலகில் வேறு எந்தக் கட்சிக்கும் எப்போதும் ஏற்பட்டதில்லை. வெள்ளைக்கார ஏகாதிபத்தியம் சுயராஜ்யம் எனது பிறப்புரிமை என்று காங்கிரசார் முழக்கமிட்டதைச் சட்டவிரோதம் என்று தடைபோடவில்லை. சனநாயகப் போர்வையில் உலவிவரும் காங்கிரஸ் ஆட்சி திராவிடத்தின் விடுதலை கீதத்திற்கே தடை விதிக்கிறது.

இந்த நயவஞ்சகத் திட்டத்தைத் தகர்த்தெறியவும் இதற்குக் காரணமான காங்கிரஸ் ஆட்சியை அப்புறப்படுத்துவதே நமது முதற் கடமையாகிறது. அவ்வித கடமைகளை, நமது மதிப்பிற்குரிய வழிகாட்டி அண்ணு அவர்கள் விடுக்கும் அரிய ஆலோசனைகளை அன்புக்கட்டளைகளை நாம் பின்பற்றி கட்டுப்பாடாகச் செயலாற்றுவோம்.

இந்த உறுதியைத்தான் கழகத் தோழர்களாகிய நாம் ஒவ்வொருவரும் மேற்கொள்ளவேண்டும். தங்களது நிலையை மறந்து நம்மைக் கண்டவாறு தூற்றும் வசவாளர்களைப்பற்றி பொருட்படுத்த வேண்டியதில்லை. காலம் அவர்களுக்கு அறிவுறுத்தும் என்பது உறுதி! உறுதி! உறுதி!

- என். வி. நடராசன்


2—11—63
10 பக்கங்கள்

வார இதழ்

16 காசு.

# மக்கள் உரிமைக் கழகம் ஆள்பவரின் அநீதிகளை அதட்டிக் கேட்கும்!

## நியாயத்தை எடுத்துக் கூறும்! நேர்மை வழி நிற்கச் சொல்லும்!

### துவக்க விழாவில் அண்ணு பேருரை!

இந்த விழாவுக்கு தலைமை வகிப்பவர் எனக்கு பச்சையப்பன் கல்லூரியில் அரசியல் பேராசிரியராகவிருந்த திரு. இராஜேசுவரன் அவர்களின் துணைவியார் அவர்கள். 1938-ம் ஆண்டு நான் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டபோது எனக்கு ஆதரவாக இருந்து உதவியவர்கள்.

மக்கள் உரிமைக் கழகத்தை நிறுவியுள்ள வழக்கறிஞர் நாராயணசாமி என்னுடன் கல்லூரியில் ஒன்ருகப்படித்தவர். இடையிலே நாங்கள் பிரிந்திருந்தோம். பொதுவாழ்விலே நான் ஈடுபட்டேன். கல்லூரி நட்புக்குப் பிறகு பிரிந்த நாங்கள் பின்னல் இணைந்தோம்.

மக்கள் உரிமைக்காகப் பாடுபட ஒரு பொது அமைப்பு தேவை என்று அவர் விரும்பினுர். அந்த அமைப்புதான் மக்கள் உரிமைக் கழகம், எனக்கும் அவருக்கும் உள்ள தொடர்பு அவ்வளவுதான் அதைவிட்டு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், மக்கள் உரிமைக் கழகத்திற்கும் தொடர்பு படுத்தி பேசுவது உண்மையல்ல.

நான் எதில் சம்பந்தப்பட்டாலும் சந்தேகப்படுவார்கள்; இது என்னுடைய அரசியல் தந்திரம் என்கிருர்கள்.

இது எனக்கு உற்சாகத்தை அளிக்கிறது. ஏனெனில் வேறு எதையும் என்னைப்பற்றி எதுவும் ஒத்துக்கொள்ளாதவர்கள் தந்திரசாலி என்று ஒத்துக்கொள்கிருர்களே என்று. ஆனுல் இதில் தந்திரமேதுமில்லை. மக்களுடைய அடிப்படை உரிமைகளை பாதுகாக்க அரசியல் தொடர்பு இல்லாமல் அமைக்கப்பட்டுள்ள அமைப்புதான் மக்கள் உரிமைக் கழகம்.

இந்தக் கழகம் அரசியல் தொடர்பில்லாதது — தேர்தலில் போட்டியிடாது — கிளர்ச்சிகளில் ஈடுபடாது என்பதையெல்லாம் நண்பர் நாராயணசாமி எடுத்துச் சொன்னுர்.

அதனுல் 'அரசியல் ஆகாது' என்ருே, 'தேர்தல் கூடாது' என்ருே, 'கிளர்ச்சிகள் தேவையில்லை' என்ருே பொருளல்ல! 'இந்த அமைப்பு அவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டது என்றுதான் பொருள் !

இது, இன்று தோன்றி நாளை மறைந்துவிடக்கூடியதல்ல!

ஒரு கட்சி தோன்றி அது ஆளுங்கட்சியானவுடன் முடிந்துவிடுவதைப்போல அல்ல இது! மனித சமுதாயத்தின் உரிமைகள் நிரந்தரமாக நிலைநாட்டப்படுகிற வரை இதுவும் இருக்கும்!

பறிக்கப்படுகின்ற உரிமைகள் மீட்கப்படுமானுல் நாம் இதில் உற்சாகத்துடன் ஈடுபடமுடியும். 'இது தேவைதான்' என்று நல்லோர் ஏற்றுக்கொண்டால் நமக்கு இன்னும் உற்சாகம் ஏற்படும்.

ஆனுல், உரிமைகளைப் பாதுகாக்கும் முயற்சி அப்பழுக்கற்ற முறையில் இருக்கவேண்டும்.

ஆட்சி நல்ல முறையில் நடக்கிறதா—ஆளுபவர்கள் நல்லவர்கள்தான என்பதை அறிய சராசரி அறிவு படைத்தவர்கள் தெரிந்துகொள்ளுகிற நிலை மக்களாட்சியில் இருக்கவேண்டும்.

மக்களாகப் பிறந்துவிட்ட காரணத்தாலேயே மக்களுக்குச் சில உரிமைகள் உண்டு. அந்த உரிமைகளைப்பறிக்காமல் பாதுகாப்பது ஆட்சியினர் மேற்காள்ளவேண்டிய நெறி என்பதை இந்தக் கழகம் வலியுறுத்தும்.

முதலில் உரிமை என்பது என்ன? என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

சிலர் கோபத்தில் இருக்கும்போது உரிமைகளை விரும்பக்கூடும்; துக்கத்தில் இருக்கும்போது உரிமையை வெறுக்கலாம். உரிமை என்பது விருப்பு வெறுப்பு அடிப்படையில் அமைவதில்லை.

அடிப்படை உரிமைகள் ஒவ்வொரு நூற்ருண்டிலும் ஒவ்வொரு அடிப்படையில் எழுந்தன கி. பி. 18-ம் நூற்ருண்டுவரை மனித உயிரைப் பாதுகாப்பது என்ற அளவில்தான் அடிப்படை உரிமை இருந்தது.

''என்னை யாரும் தாக்கக்கூடாது—நான் யாரையும் தாக்கமாட்டேன்; என் உயிரை யாரும் பறிக்கக்கூடாது—நான் யார் உயிரையும் பறிக்கமாட்டேன்; என் உடைமையை யாரும் அபகரிக்கக்கூடாது—நான் எவர் உடைமையையும் அபகரிக்கமாட்டேன்.''

—என்று இப்படி உயிர்-உடைமைகள் பற்றிய உரிமைகள்தாம், அடிப்படை உரிமைகளாகக் கருதப்பட்டுப் பாதுகாப்பளிக்கப்பட்டன. அதனுல்தான் அப்போது அரசுக்குக்கூட, 'காவல் அரசு' என்று பெயர் ஏற்பட்டது.

ஆனுல், ஆட்சியில் இருப்பவர்கள் உரிமைகளைச் சின்னுபின்னமாக்கும் மிருக புத்தி இல்லாதவர்களாக இருக்கவேண்டும்.

கிராமப் புறங்களில் சொத்து விவகாரம் பற்றிப் பஞ்சாயத்துக்கு வருபவர்கள் 'சொத்தை முதலில் என் பெயரில் எழுதிவை; என் தீர்ப்பை ஏற்றுக்கொள்வதாக எழுதிக் கொடுத்த பிறகு நான் பஞ்சாயத்துச் செய்கிறேன்' என்று கூறுவதைப் போல், ஆட்சியில் உள்ளவர்கள் நடந்துகொண்டால், மக்களுக்கு உரிமை கிட்டாது.

உரிமையைப் பறிக்க நினைக்காதவர்கள் — அக்கிரமத்துக்குத் துணை போகாதவர்கள் ஆட்சியில் இருக்கவேண்டும்; ஆட்சியில் இருப்பவர்கள் அக்ரமம் செய்தால் அவர்களை ஆட்சியை விட்டு இறக்கும் அதிகாரம் மக்களுக்கு இருக்கவேண்டும்.

முதன் முதலில்மதச் சுதந்திரம்தான் அடிப்படை உரிமையாகக் கருதப்பட்டது.

மதத்தின் காரணமாகப் பல அரசுகள் தாக்கப்பட்ட பிறகு— பல நாடு நகரங்கள் அழிக்கப்பட்ட பிறகு—இந்த உரிமை நிலைநாட்டப்பட்டது! அவரவர் உள்ளத்துக்கு ஏற்றது என்று கருதப்படுகின்ற மார்க்கத்தை வழிபடலாம்—கடைபிடிக்கலாம்— என்று ஒப்புக்கொள்ளப்பட்டு 'இந்த உரிமைதான் அடிப்படை உரிமைகளில் தலையாயது' என்று அன்று கருதப்பட்டது.

கி. பி. பத்தொன்பதாம் நூற்ருண்டில் தொழில்கள் பெருகி தொழிற்சாலைகள் ஏற்பட்ட பின்னர்—மார்க்கங்களின் மீது மக்களுக்குக் கிடந்த பிடிப்பு மெல்ல அகல ஆரம்பித்த பிறகு, எண்ணுவதை எடுத்துரைக்க—எழுத—கூடிப்பேச உரிமை வழங்கப்பட்டது.

இதைத்தான் அடிப்படை உரிமை என்று கூறுகிருர்கள்.

எந்த அரசானுலும் இந்த உரிமையைத் தந்தால்தான் அதை ஒரு நாகரிக அரசாக உலகினர் ஏற்றுக் கொள்வார்கள் என்ற நிலை ஏற்பட்டது.

ஆனுலும், இந்த நிலை தோன்றிய முப்பதாண்டுக்குப் பிறகுதான் சர்வாதிகாரிகள் பலர் தோன்றினா என்பதையும் மறந்துவிடக் கூடாது. ஜெர்மனியில்கெய்சரும், பிரான்சில் லூயியும் தோன்றினுர்கள்

எந்த அரசானுலும்—இந்த உரிமை அளிக்கப் பட்டு அது பாதுகாக்கப் படுகிறதா என்று பார்க்க வேண்டும் என்பதற்காகத் தான் 'லீக் ஆப் நேஷன்' என்ற சர்வதேச சங்கம் தோற்றுவிக்கப் பட்டது.

அதன் பிறகாவது அந்த உரிமை பாதுகாக்கப் பட்டதா என்ருல் இல்லை. அந்தச் சங்கத்தையே தங்கள் உடமையாக்கிக் கொள்ள சிலர் முயன்றனர்; அந்தச் சங்கம் உடைபட்டது.

அதன் பிறகு, இரண்டாவது உலகப் போர் முடிந்ததும் அந்த நோக்கத்துக்காகவே ஐக்கிய நாடு மன்றம் அமைக்கப் பட்டது.

அதன் அடிப்படை நோக்கங்களில் ஒன்ருக—மனித சமுதாயத்தின் உரிமைகளைப் பாதுகாப்பது தலையாய கடமையாக இருந்து வருகிறது. அது நேரடியாக ஓர் உள்நாட்டு அரசியலில் ஈடுபடக் கூடாது — அப்படி ஈடுபடத் தேவையுமில்லை—அந்த அதிகாரமும் அதற்கில்லை.

மக்கள் உரிமை பாதிக்கப் படுகின்ற போது—அதை ஐ.நா. மன்றத்துக்கு அறிவித்தால்—அதற்காக அந்த மன்றம் பணியாற்றும் வாய்ப்பும் அதற்கு இருக்கிறது. அப்படி பணியாற்றுகிறதா என்ருல் எல்லை. ஆனுல் பணியாற்ற வாய்ப்பு அளிக்கப் பட்டிருக்கிறது.

இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் அடிப்படை உரிமை அழிக்கப் பட்ட நேரத்தில் ஐ.நா. மன்றத்திடம் முறையிட்டனர். ஒரு இனத்தையே கருவறக்கும் காரியத்தில் இலங்கை அரசு ஈடுபட்டது. அதை ஐ. நா. மன்றம தடுத்து நிறுத்தியதா என்ருல், இல்லை!

(10-ம் பக்கம் பார்க்க)

# கழகம் உங்களிடம்; காப்பது உங்கள் கடன்!

அறிஞர் அண்ணா

இந்திய அரசியல் சட்டத்தில் புதியதிருத்தம் (16-வது) செய்து, திராவிடநாடு கேட்பதற்கான பேச்சு உரிமையை பறித்துக் கொண்டதால், தி. மு. க இயங்கக் கூடிய நிலையில், கழக சட்ட திட்டத்தைத் திருத்திக் கொள்ள முடிவு செய்திருக்கிறோம் என்று நான் அறிவித்தது முன்னாள் முதலமைச்சராம் காமராசருக்குப் பிடிக்கவில்லை.

அவருக்கு எது பிடிக்கும் என்று கண்டுபிடித்துத் தயாரித்துக் கொடுக்கும் வேலையில் நான் இல்லை. எனவே நான் மேற்கொள்ளும் நடவடிக்கை அவருக்குப் பிடிக்கிறதா இல்லையா—என்று கவனிக்க வேண்டிய நிலை எனக்கில்லை.

ஆனால் ஏன் அவருக்கு இது பிடிக்கவில்லை என்பது புரிகிறது. அவருக்கு நான் அறிவித்துள்ள முடிவு, ஏமாற்றத்தை தருகிறது; எரிச்சலூட்டுகிறது.

தூண்டிலில் சிக்காத மீன், வலையில் விழாத மான் ஆகியவை மீது அவைகளைப் பிடித்துத் தின்றுவிட எண்ணம் கொண்டிருந்தவர்களுக்குக் கோபம் கோபமாகத்தான் வரும், இது இயற்கை!

அரசியல் சட்ட திருத்தம் காரணமாக, அதன் விளைவுகள் பற்றிக்கவலைப்படாமல், வீராவேச உணர்ச்சியால் மட்டும் உந்தப்பட்டு, கழகம் செயல்படும்; உடைபடும்; அடுத்த பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியை எதிர்த்துப் போட்டியிட்டு, திருச்செங்கோடுகளை, திருவண்ணாமலைகளைப் பெறத்தக்க நிலையிலுள்ள கழகம் அழிந்து படும் என்று அவரும் அவர்போன்றோர் சிலரும் நம்பிக் கொண்டிருந்தார்கள்.

இப்போது நான் எடுக்கும் முடிவு கழகம் உருக்குலையாமல் இருந்திட வழி செய்கிறது!

தடைச் சட்டம் புகுத்தியும், கழகம் அழிய மறுக்கிறதே, அடுத்த பொதுத் தேர்தலுக்குத் தயாராகி வருகிறதே நினைத்தது நடக்கவில்லையே, என்பதை எண்ணும்போது காமராசருக்கு எரிச்சல் மூண்டுவிடுகிறது.

அதன் காரணமாக நமக்கு எரிச்சலைமூட்ட, இது **கோழைத்தனம்** என்று நிருபர்களிடம் கூறியுள்ளார்.

பெரிய நிலையில் உள்ளவர்! எரிச்சலாகி வேறு இருக்கிறார். எனவே, எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசுகிறார்; நமக்கு எரிச்சலூட்டவேண்டும் என்ற எண்ணத்துடன்.

கழகம் துவக்கப்பட்ட நாளிலிருந்து, பல்வேறு தலைவர்கள் எனக்கு எரிச்சல் மூட்ட எத்தனையோ பேசியிருக்கிறார்கள்.

அப்பாவி
அறிவிலி
கோழை
கொடிதூக்கி
கூத்தாடி
கோமாளி

இவை, என்மீது வீசப்பட்ட ஏசல் மொழிகளிலே, சற்று நாகரீகமானவைகள். சாக்கடைச் சரக்கு கொண்டே தயாரிக்கப்பட்ட தூற்றல்கள் நிரம்ப! அவைகளைக் கூறி, உங்கள் நேரத்தை அழுக்காக்க நான் விரும்பவில்லை.

அவ்வளவு அர்ச்சனைகளுக்கும் சேர்த்து நான் கூறியது ஒன்றுதான் **வாழ்க வசவாளர்!** எனபது தான.

இவருக்கும் அதே பதிலைத்தான் தரவேண்டியிருக்கிறது.

**கோழைத்தனம்**, என்பது ஒரு தனிமனிதன் கொண்டுவிடும் போக்கைக் குறிப்பதாகும்.

ஒரு கொள்கையை மேற்கொள்வதால், ஒரு நடவடிக்கையிலே ஈடுபடுவதால், எனக்கு கஷ்டம் ஏற்படும் எனக்கு ஆபத்து ஏற்படும். நான் இழப்புக்கு ஆளாக வேண்டி ஏற்படும்—என்ற நிலை எழும்போது, நான் அந்த கஷ்ட நஷ்டம், இழப்பு இன்னல் ஆகியயவற்றைத் தாங்கிக் கொள்ளத் துணிவு கொள்ளாமல், விரும்பாமல், அஞ்சி ஒதுங்கிக்கொண்டால், கொள்கையை விட்டுவிட்டால் அது கோழைத்தனம்.

இதுதான் எனக்கு தெரிந்த இலக்கணம்.

இந்த விதிக்கேகூட விலக்குகள் உண்டு—வள்ளுவர் அதற்காகத்தான் "அஞ்சுவது அஞ்சாமை பேதமை" என்றார்.

ஒருவனைத் துரத்திக் கடித்திட வெறிநாய் வரும்போது, எதிர்த்து நின்று, கடி! கொதறு! பயம் இல்லை! கோழை அல்ல நான்!—என்று ஒருவன் முழக்கமிடுவான் என்று நான் எண்ணவில்லை, ஓடிவிடுகிறான்! காமராசர் இதனைக் கூடக் கோழைத்தனம் என்று கூறக்கூடும். அவர் பெரியவர்—அதாவது பெரிய நிலையிலே உள்ளவர்—எதையும் பேசி, ஜீரணித்துக் கொள்வார்!

வெறி நாய் ஒரு சிறுவனைக் கடிக்கத் துரத்தக் கண்டு, நான், அந்த சிறுவனைக் காத்திட முற்படாவிட்டால், நான் கோழை மட்டும் அல்ல, மனிதப் பிறவி என்ற இலக்கணத்துக்கே உரிமையற்றவனாகி விடுகிறேன்,

இந்த நிலையில் என் கடமை, சிறுவனைக் காப்பாற்றி அவனை வேறிடம் அழைத்துச் செல்வது, அந்த கடமையைச் செய்வதற்கு நான் அஞ்சினால், தயங்கினால், அதுதான் உள்ளபடி கோழைத்தனமாகும்.

காமராசர் சுட்டிக் காட்டுகிற தடைச் சட்டம், தனியாக என் மீது வீசப்படுவது அல்ல. அது போன்றே கழகத்தில் உள்ள எந்தத் தனிப்பட்டவர் மீது மட்டும் வீசப்படுவது அல்ல. எனவே இதிலே எவர் ஒருவருடைய தனிப்பட்ட "வீரதீர பராக்கிரம"ப் பிரச்சினையும் இணைக்கப்பட்டு விட்டிருக்கவில்லை.

இதை மற்றோர்விதத்தில் விளக்க முற்படுகிறேன்.

நான் ஒரு ஊரில் பேசச் செல்கிறேன் — அப்போது பேசக் கூடாது என்று எனக்குத் தடை உத்திரவு பிறப்பிக்கப் படுகிறது என்றால் அப்போது **நான்** என்ன செய்யவேண்டும் என்ற பிரச்சினை **எனக்கு** எழும் தடையை மீறுவதா? வேண்டாமா? என்ற பிரச்சினையை நான் தீர்க்கவேண்டும் மீறுவேன் என்று கூறிச் செய்தால் வீரன் என்று என்னை அப்போது கூட காமராசர் பாராட்டுவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. மீறாவிட்டால் கோழைத்தனம் என்று காமராசர் கூற, ஓரளவு உரிமை பெறுகிறார்.

தடை விதிக்கப்படுவது தி. மு. கழகம் முழுவதிற்கும் தடை மீறினால், தி. மு. கழகத்திலுள்ள இன்னின்னார் மட்டும் தண்டனை பெறுவர் என்பதல்ல நிலைமை.

பிரிவினையைத் திட்டமாகக் கொண்டது இந்தக் கழகம் என்று ஏட்டில் இருந்தாலே போதும், கழகத்தை கலைத்துவிட இயலும், சட்டம் தாக்க வருவது, தனி நபர்களை அல்ல—கழகத்தை—ஒரு அமைப்பை—ஒரு திட்டத்தை.

எந்த திட்டத்தை—அதாவது பிரிவினைப் பேச்சை தாக்கச் சட்டம் வருகிறதோ அந்த சட்டத்தைத் துணைகொண்டு வருவோருக்கு, திட்டத்தின் மீது அல்ல கோபம் — திட்டத்தைக் கொண்டுள்ள அமைப்பின் மீது—கழகத்தின் மீது எனவே அவர்கள் விரும்புவது எதிர்பார்ப்பது, கழகம் அழிந்துபட வேண்டும் என்பதாகும். இதை உணர்ந்து முடிவுகளெடுக்கும் பொறுப்பு கொண்ட பொதுக்குழு இந்நிலையில், கழகம் என்ற அமைப்பு உடைபட்டுப் போகாமல் நிலைமைக்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்கும் அதிகாரத்தை எனக்குக் கொடுத்தது. அதன்படி செயலாற்றுகிறேன்.

இதிலே கோழைத்தனம் என்ன இருக்கிறது? எங்கே எழுகிறது? என்பது எனக்குப் புரியவில்லை.

கொள்கையை விட்டுவிடலாமா? அதுவும் பயம் காரணமாக விட்டுவிடலாமா? அடக்கு முறைக்கு அஞ்சி விட்டுவிடலாமா? அதுதான் கோழைத்தனம்—என்று காமராசர் கூற வருவார்.

தனிப்பட்டவர்கள், தமக்கு வரக்கூடிய இன்னலுக்கு அஞ்சி, அடக்கு முறைக்குப் பயந்து, கொள்கையை விட்டுவிட்டால், கோழைத்தனம் என்று அதனைக் கூறலாம்.

இது, ஒரு அமைப்பு தன்னைத் தான் இயங்க வைத்துக் கொள்ளச் செய்து கொள்ளும் ஏற்பாடு- கோழைத்தனம் ஆகாது.

ஒரு கழகம் அல்லது ஒரு அமைப்பு, இதுபோல நிலைமையைக் கவனித்து, மாறுதல் செய்துகொள்வது இதற்கு முன்பு எங்காவது எப்போதாவது நடைபெற்றது உண்டா? என்று கேட்பின், உண்டு! என்று கூறுவேன்.

பல, எடுத்துக்காட்ட இப்போது விரும்பவில்லை—"உலகப் பிரசித்திப் பெற்ற" ஒன்று மட்டும் கூறுகிறேன்.

பாகிஸ்தான் — பாதகஸ்தான் என்றவர்கள்,

பாகிஸ்தான் பசுவை, சிசுவை வெட்டும் பாதகத்துக்குச் சமம் என்று பேசியவர்கள்,

என்ன நேரிட்டாலும், பாகிஸ்தானுக்கு இசையோம் என்று முழக்கமிட்டவர்கள், காங்கிரசு தலைவர்கள், இதனை ஊரறியும் உலகறியும்.

இந்தக்காட்டுமிராண்டிக்காலக் கருத்தை நான் ஏற்றுக் கொள்ளவே முடியாது என்று எக்காளமிட்டவர் பண்டித நேரு.

இந்தத் திட்டம் பாபகாரியம் என்று ஏடு தீட்டினார் பாபு ராஜேந்திர பிரசாத்.

மகாத்மா காந்தியோ பாகிஸ்தான் பிரிவதானால் என் பிணத்தின் மீதுதான் பிரிக்கப் படவேண்டும் என்று நெஞ்சம் உருகும் விதமாகப் பேசினார்.

காங்கிரசு தலைவர்கள் வீரர்கள், தீரர்கள், பாகிஸ்தான் பிரச்சினையிலே பணியவே மாட்டார்கள்—கோழைத்தனம் காட்ட மாட்டார்கள் என்று ஏடுகளெல்லாம் எழுதின; உற்சாக மூட்டின.

நடந்தது என்ன? நாடு அறியும் பாகிஸ்தான் எதிர்ப்புக் கொள்

கையைக் காங்கிரஸ் கைகழுவி விட்டது.

இது கோழைத்தனம் அல்லவா என்று நான் கேட்க வில்லை- நிலைமைக்கு ஏற்றபடி நினைப்புகளையும் நடவடிக்கைகளையும் மாற்றிக்கொள்வது ஒரு அமைப்பிற்கு ஏற்பட்டுவிடும் — அது கோழைத்தனம் ஆகாது.

கோழைத்தனம் எதனுல் ஏற்படக் கூடும்? இன்னல் ஏற்க வேண்டும். சிறைப்பட வேண்டும். கொடுமைகளைத் தாங்கிக் கொள்ள வேண்டும் என்று ஏற்படும்போது இவைகளைத் தாங்கிக் கொள்ளும் துணிவு பிறவாமலிருப்பது, கோழைத்தனமாகும்.

தி. மு. கழகத்தவரும் எவரும், கஷ்டநஷ்டம் ஏற்கத் துணிவற்ற கோழைகள் அல்ல.

இரண்டுநாட்களுக்கு முன்பு தான் நான் **மணிமேகலை** என்ற பெயர்சூட்டினேன், அருமைத் தோழர் சண்முகம் பெற்ற செல்வத்துக்கு, **செந்துறை** என்ற ஊரில்,

விலைவாசி ஏற்றத்தை எதிர்த்து நடத்தப் பட்ட மறியலில் ஈடுபட்டுச் சிறை சென்றவர் சண்முகம்.

அவர் சிறையிலிருந்தபோது அவருடைய அருமைத் துணைவியார் மாண்டுபோனுர்-கலங்கினுர் கண்ணீர் வடித்தார் சிறைக்குள்ளே! மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வெளியே ஓடிவிடவில்லை. இப்போதும் கழகம்தான்-தன் மகளை எடுத்துக் கொண்டு வந்து பெயரிடும் படி என்னைக் கேட்டார். என் மனம் உருகிற்று.

அத்தகையவர்கள் நிரம்ப இருக்கிருர்கள் கழகத்தில்.

இவர்களைக் கோழைகள் என்று கருதுகிருர் காமராசர்!

இப்படிப் பட்டவர்கள் உள்ள கழகம் மேற்கொள்ளும் முடிவு, கோழைத்தனமானது என்கிருர் காமராசர், சரியா?

இவர்களில் ஒருவரும், 'தடைச் சட்டத்தால் தங்களுக்கு என்னென்ன இன்னல் ஏற்படக் கூடும் என்பது பற்றி அஞ்சி கோழைத்தன முடிவு எடுத்தவர்கள் அல்ல. கழகம் என்ற அமைப்புக்கே அழிவு தேடிடத்தடைச் சட்டம் வருவதுகண்டு; கழகத்தைக் காத்திட, இயங்க வைத்திட, கழக சட்டதிட்டத்தில் மாறுதல் செய்யும் முடிவு எடுக்கிருர்கள்—இது எப்படி கோழைத்தனமாகும்?

கோழைத்தனம் என்பது எதிர்ப்புக்கு அஞ்சுவது என்ருல் கழகத்தவர் எத்தனையோ விதமான எதிர்ப்புகளைக்கண்டவர்கள் கலங்காதவர்கள்.

கோழைத்தனம் என்பது சிறைபுக அஞ்சுவது என்ருல் இவர்கள், சிறைக்கொடுமைகளை ஏற்றுக்கொண்டவர்கள் — பலமுறை. இவர்களை எப்படி பயந்துவிட்டார்கள் என்றே, இவர்கள் எடுக்கும் முடிவை எப்படி கோழைத்தனம் என்றே கூறலாம்!

இவர்கள் எடுத்துள்ள முடிவு, கழகம் எனும் அமைப்பு அழிந்துபடாமல் இருந்திடச்செய்கிறதே என்ற எரிச்சல் காரணமாகத் தான் காமராசர் இந்த முடிவை கோழைத்தனம் என்கிருர். பாகிஸ்தான் சமயத்தில் காங்கிரசின் பெருந் தலைவர்கள் தங்கள் வீராவேசத்தை விட்டுவிட்டு, கொள்கையை விட்டுவிட்டு, பாகிஸ்தானுக்கு இசைவு தந்துவிட்டார்கள் என்பதை மறந்து.

இந்தி திணிப்பை எதிர்த்துச் சிறைசென்று கொடுமைகளை ஏற்றுக்கொண்டவர்கள் நிரம்ப இருக்கிருர்கள் கழகத்தில். இது கோழைத்தனத்தின் அறிகுறியா?

மும்முனைப் போராட்டத்தில் ஈடுபட்டு, கடும் தண்டனை பெற்று, சிறைசென்றவர்கள் பலப்பலர் உளர் கழகத்தில்—சிறை சென்றவர்கள் இப்போது மேற்கொள்ளும் முடிவு, சிறைக்கு அஞ்சி மேற்கொள்ளப்படும் கோழைத்தனமான முடிவா!

இதோ இப்போது இதே கழகத்தவர், மொழி ஆதிக்கத்தை எதிர்த்திட, இந்திய அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவைக் கொளுத்துவதாக அறிவித்துவிட்டனர்—மூன்று ஆண்டுகள் தண்டிக்கலாம் இதற்கு! கோழைத்தனம் என்று இந்தச் செயல்வீரர் மேற்கொள்ளும் முடிவைக் குறித்துக் கேலி பேசுவதா! முறையா?

விலைவாசிக் குறைப்புக்காக நடத்தப்பட்ட மறியலில் ஈடுபட்டுச் சிறைப்பட்டனர் பல்லாயிரவர்—கழகத்தவர்—அவர்களா சிறைசெல்ல அஞ்சிக்கொண்டு ஒரு கோழைத்தனமான முடிவு எடுப்பார்கள்!

கழகம் இயங்கிவருவதற்காக எடுக்கப்படும் முடிவைக் கோழைத்தனம் என்கிருர் காமராசர்—ஆனுல் அந்த கோழைகள் அரசியல் சட்ட எரிப்பு, மறியல் போன்ற செயல்களில் ஈடுபடப்போகிருர்கள் — சிறைத்தண்டனை ஏற்கப்போகிருர்கள்!

தெரியுமா! தெரியுமா! கழகத்தாரின் கதை!! கோழைத்தனமான முடிவு எடுத்துவிட்டார்கள் என்று காமராஜர் பேசிக்கொண்டு இருக்கும்போது, கோழைத்தனம் என்ற தூற்றலைத் தாங்கிக்கொள்ளும் கழகத் தோழர்கள், எங்கே இருக்கப்போகிருர்கள்? சிறையில்! இது கோழைத்தனத்தையா காட்டுகிறது!!

இவ்வளவு விளக்கமாக இது தெரிகிறபோது காமராசர் ஏன் ஏசுகிருர்-கோழைத்தனம் என்று? பக்குவமற்றவர்கள், இந்தப் பேச்சை கேட்டுப் பதறுவார்கள் — பரபரப்பு அடைவார்கள் — தடையை மீறுவார்கள்-கழகத்தை அழித்துக்கொள்வார்கள்—கழகம் அழிந்தால் 1967-ம் ஆண்டு தேர்தலை எளிதாகச் சமாளித்து விடலாம் என்ற நப்பாசைதான் காரணம்!!

நாம் எடுக்கும் முடிவு கழகத்தை இயங்கவைக்க. கோழைத்தனத்தால் அல்ல; நாமொன்றும் சிறைக்கு அஞ்சும் கோழைகள் அல்ல; இதோ இப்போது நாம் ஈடுபடும் இந்தி எதிர்ப்பு அறப்போர் காரணமாகச் சிறைப்படப் போகிறேம். நம்மை கோழைத்தனமான முடிவு என்று ஏசினுல் பொருத்தமோ — பொருளோ இல்லை - பொச்சரிப்புக்காரணமாக வெளிவரும் தூற்றல் என்பதன்றி, இவர் தம் பேச்சுக்கு வேறு என்ன பெயரிடமுடியும் என்று தான் கழகத்தவர் எண்ணுவர், பேசுவர்.

கழகத் தோழர்கள், இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து சிறைபட்டுக் கொடுமைகளை ஏற்றுக் கொள்வதுடன், கோழைத்தனம் என்ற பழிச்சொல்லையும் தாங்கிக் கொள்ள வேண்டிட நேரிடுகிறது.

ஆனுல், எது கோழைத்தனம் என்பதை எண்ணிப்பார்த்தால் கழகம் மேற்கொண்டுள்ள முடிவு இந்த நேரத்தில் மேற்கொள்ள வேண்டிய தேவையான பொறுத்தமான முடிவுதான் என்று கழகத்தவர் உணருவர்.

கோழைத்தனமான முடிவு என்று காமராசர் ஏசிக்கொண்டிருக்கும்போது, தாய்மொழி காத்திட, இந்தி ஆதிக்கத்தை எதிர்த்திட, கழகத்தவர் சிறை சென்று கொண்டிருப்பர். **அவர்கள் சிறையில் இருப்பர்—காமராஜர் அவர்கள் மேற்கொண்ட முடிவு கோழைத்தனமானது என்று ஏசிக்கொண்டிருக்கும் வேளையில்!**

இந்திமொழி ஆதிக்கத்தை எதிர்த்து, கழகத் தோழர்கள் சிறை செல்லும்போது, அவர்களைக் கோழைகள் என்று காமராசர்கள் கூறித்திரிவார்களானுல், மக்கள் கைகொட்டிச் சிரிப்பார்கள்—இதோ அஞ்சாமல் அயராமல் பாடுபட்டு-சிறையில் தள்ளப்பட்டுக் கஷ்டம் மேற்கொள்கிருர்கள், 'துணிந்து; இவர்களையா கோழைத்தனம் என்று காமராசர் ஏசுவது, இது வெந்தபுண்ணிலே வேல்பாய்ச்சுவது போல அல்லவா இருக்கிறது என்று மக்கள் பேசுவர் — காமராசரின் கேலிமொழி பொருளற்றதாகிப்போகும்,

கோழைத்தனமான முடிவு என்று கேலி பேசும் காமராஜர் வெளியே! பவனி!

கோழைத்தனமான முடிவு எடுத்தவர்கள் என்று ஏசப்படும் கழகத்தோழர்கள், சிறையில்!

சிறையில் அடைக்கப்பட்டு வாடிடுவோரை, வெளியே உலா வரும் காமராஜர் கோழைகள் என்று பேசுவதைக் கேட்டு, மக்கள் இடி இடியென சிரித்து,

யாரை ஐயா! கோழைத்தனமான முடிவு எடுத்தவர்கள் என்று கூறுகிறீர்கள்? இந்தி எதிர்ப்பு காரணமாகச் சிறைப்பட்டுக் கிடந்திடுவோர்களையா!!

என்று கேட்டுக் கேலி பேசுவர்.

எனவே காமராஜரின் பழிமொழி, கழகத்தவர்களைத் துளியும் பாதிக்காது.

மேலும் இந்த நேரத்தில், கழகத்தவரைக் கேலி பேசுவதும், எதற்காக என்பதைக் கழகத்தவர் உணருகிருர்கள்.

இந்தி எதிர்ப்பு அறப்போரில் கழகம் ஈடுபட முடியாதபடி செய்திடவேண்டும் என்ற நோக்கம் காரணமாகவே கோழைத்தனமான முடிவு என்று காமராஜர் தூற்றி உலா வருகிருர்.

இந்தி எதிர்ப்பு அறப்போரினை, கழகம் என்ற ஒரு அமைப்பின் மூலமாக நடத்துவதே சீரிய பலனைத் தரும் என்பதில் நம்பிக்கைக் கொண்டவர்கள் முன்னுள் முதலமைச்சரின் இந்நாள் பேச்சைப் பெரிதாக மதிக்கமாட்டார்கள்.

ஏசுகின்ருர், எரிச்சலூட்டப்பட்டு விட்டதால்! எரிச்சல் எழுகிறது, கழகம் கலையாமம் இருந்திட வழி தேடுவதால்.

இந்தச் சூட்சமம் புரியும்போது, காமராஜரின் பேச்சினைப் பொருட்படுத்தத் தேவையில்லை என்று நன்ருகத் தெரிகிறது.

காமராசர் ஆத்திரப்பட்டு தூற்றுவதிலிருந்து, நாம் நல்ல முடிவுதான் எடுத்திருக்கிறேம் என்ற நம்பிக்கையே நமக்கு எழுகிறது.

எனவே கழகத் தோழர்கள் இந்தி எதிர்ப்பு அறப்போரினைச் செம்மையாகவும் வெற்றிகரமாகவும் எப்படி நடத்திச் செல்ல வேண்டும் என்பதிலே கவனம் செலுத்தவேண்டும்.

இந்தி எதிர்ப்புப் பிரச்சினை பற்றி மக்களிடம் பேசிடாமல் தடுக்கவே, காமராசர் போன்றவர்கள், கழகம் உடைபடாதிருக்க நாம் மேற்கொள்ளும் முடிவினைக் குறித்துக் கேலிபேசி, மக்கள் கவனத்தை வேறு பக்கம் திருப்பிவிடட் பார்க்கிருர்கள். இதை மனதில்கொண்டு, கழகத்தவர், தூற்றல் பேச்சைக் காதிலே போட்டுக் கொள்ளாமல, இந்தி எதிர்ப்பு அறப்போர் முறையாக நடத்தப்படுவதற்கான திட்டம் பற்றி, மக்களுக்கு அறிவிக்கும் சீரிய பணியினைச் செய்து வர வேண்டும்.

கோழைத்தனம் என்று ஏசி. அதைக் கேட்பதாலே நாம் எரிச்சல் கொண்டு, அடுத்த காரியமான இந்தி எதிர்ப்பு அறப்போரை விட்டுவிடுவோம் என்று காமராசர் எதிர்பார்க்கிருர் அதனை உணர்ந்து அறப்போரில் முழுக் கவனம் செலுத்தவேண்டும் கழகத் தோழர்கள்.

இன்னும் என்னென்ன பேசி, மனக்குழப்பம் மூட்டலாம் என்று காங்கிரஸ் தலைவர்கள் யோசித்தபடி உள்ளனர்.

மனதைக் குழப்பிவிடத் தக்க தப்பு பிரச்சாரத்தை அவர்கள் நடத்தும்போது, நான் வெளியே இருப்பதற்கில்லைசிறையில்தள்ளப்பட்டுக் கிடப்பேன். எனவேதான் வெளியே இருக்கும் இப்போதே, கூறுகிறேன், **அறப்போர்! அறப்போர்!** அது ஒன்றே நமது சிந்தனையில் பதிந்திருக்கவேண்டும்- அதனைக் குலைக்கக் காங்கிரசு தலைவர்கள் பேசிடுவது அவ்வளவும், **அக்கப் போர்!**

ஆமாம், அதனை உணர்ந்து அடுத்த காரியத்தில் நாட்டம் கொண்டு, செயலாற்றுங்கள். பிடிபடு முன்பு நான் கூறவேண்டியவை பல உள.

**எத்தனை நாட்கள் இருக்கின்றனவோ, நான் வெளியே இருந்து, உங்களிடம் என் எண்ணத்தை எடுத்துக் கூறிட. வெளியே இருக்கும் வரையில் கூறிவருகிறேன். பிறகு?**

## கழகம் உங்களிடம்!
## காப்பது உங்கள் கடன்!

# இந்தி ஏகாதிபத்தியம்! நாட்டின் மிகப்பெருங் கேடு!

**பிராங்க் அந்தோணி எம். பி.**

இந்தி ஏகாதிபத்தியத்தின் தலையாய நோக்கங்களுள் ஒன்று, ஆங்கிலத்தின்பால் தவருகக் கொண்டிருக்கும் வெறுப்பாகும்.

ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாகக் கொண்ட பள்ளிகள்தான், ஆங்கில போதனையின் கேந்திரங்களாக இருக்கின்றன. அவற்றை நாசப்படுத்தி விட்டால்—ஒழித்து விட்டால் ஆங்கிலத்தை நாசப்படுத்திவிடலாம்; அப்புறம் சில மாயவேலைகளால் இந்தி மத்திய ஆட்சி மொழியாகிவிடும் என்ற மூட நம்பிக்கையோடு இந்தி வெறியர்கள் செயல்பட்டனர்.

இந்த நோக்கத்தினுல்தான் 1953-ல் ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாகக் கொண்ட பள்ளிக்கூடங்களை அழிக்க விரும்பும் உத்தரவொன்றை அப்போதையப் பம்பாய் அரசு பிறப்பித்தது.

அவ்வுத்தரவின்படி, ஆங்கிலோ-இந்தியர்களில்லாத வேறு இந்தியர்களுக்கு அப்பள்ளிகள் ஆங்கிலத்தின் மூலம் போதிக்க முடியாது.

நல்ல வேளையாக. முதலில் பம்பாய் உயர்நீதி மன்றத்தின் மூலமும், பின்னர் இந்தியத் தலைமை நீதிமன்றத்தின் மூலமும் அவ்வக்கிரமமான உத்தரவை நீக்கும் வாய்ப்பை நான் பெற்றிருந்தேன்.

ஆங்கிலோ—இந்தியப் பள்ளிகள், ஆங்கிலோ-இந்தியக் குழந்தைகளுக்கு மட்டுமின்றி, பிற சமூகத்தின் குழந்தைகளுக்கும் ஆங்கிலத்தில் போதிக்கும் உரிமையை நிலைநாட்டினேன்.

1955-இல் அமைக்கப்பட்ட ஆட்சிமொழி ஆணைக் குழுவின் சிபாரிசுகள், முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டனவே. ஏனென்ருல், அக்குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்கள் இந்திக்குக் காட்டும் தனிச்சலுகை எல்லோருக்கும் தெரிந்ததே.

அக்குழுவின் உறுப்பினர்களான டாக்டர் சுப்பராயனும், இந்திய மொழியியல் வல்லுநரான டாக்டர் சுனிதகுமார் சட்டர்ஜியும் எழுதி வைத்த எதிர்ப்புக் குறிப்புகள் ஒதுக்கித் தள்ளப்பட்டுவிட்டன. இந்தித் திணிப்பில் அவசரம் கூடாதென்றும், தற்போதுள்ளநிலையே தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்றும் அவர்களின் எதிர்ப்புக் குறிப்பு அமைந்தன.

1958-ல் பாராளுமன்ற ஆட்சி மொழிக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. அதில் தங்களவரே இடம்பெற வேண்டுமென்பதற்காக, காங்கிரசுக் கட்சி கடுமையாகக் கொறடா விதித்திருந்தது. எனினும், நான் உட்பட பல சுயேச்சைகள் தேர்ந்தெடுக்கப்பட்டோம். எனவே, அக்குழு பற்றி நான அனைத்தும் தெரிந்த நிலையில் பேசமுடிகிறது.

குழு நடவடிக்கைகள் ரகசியமாக நடத்தப்படக்கூடாது; செய்தியாளர்கள் அனுமதிக்கப்பட வேண்டும்-அழைக்கப்பட வேண்டும்; தமிழ்நாடு, வங்காளம் ஆகியவற்றின் முதலமைச்சர்கள் கருத்து கேட்கப்பட வேண்டும். ஏனென்ருல், இந்தி மட்டும் ஆட்சி மொழியாவதற்கு இவ்விரு மாநிலங்களும் திட்ட வட்டமான எதிர்ப்பை காட்டுவன — இவ்வாறு நான் விடுத்த வேண்டுகோள்களெல்லாம் ஒதுக்கப்பட்டு விட்டன.

அக்குழுவின் சூழல், தரங்குறைந்ததாகவும் ஆபாசமானதாக ஆக்கப்பட்டது. இந்தி ஆதரவாளர்கள் சகிப்பில்லாத் தன்மையும் ஆக்கிரமிப்பு மனோபாவமுமே இதற்குக் காரணம்.

அக்குழுவில் நான் பெற்ற அனுபவம் மகிழ்வானதில்லை. புதிய இந்தி ஏகாதிபத்தியத்தின் வேகத்தைச் சிலர் தடுத்து நிறுத்த வேண்டும் இல்லாவிட்டால் புதிய ஏகாதிபத்தியம், சிறுபான்மையர் மொழிகளை அழிக்கும் முயற்சியை முன் நடத்திச் சென்றுவிடும். இதுவே நான் அங்கு பெற்ற அனுபவம்.

அதனுல் ஒன்றே ஒன்ருன எனது எதிர்ப்புக் குறிப்பை அக்குழுவின் அறிகையோடு இணைத்தேன்.

அரசியல் சட்ட எட்டாவது ஷெட்யூலில் ஆங்கிலத்தையும் சேர்க்க வேண்டும் என்ற எனது தனி நபர் தீர்மானம் 1959-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆங்கிலம் எட்டாவது ஷெட்யூலில் சேர்க்கப்படுவதற்காக உண்மையான வேண்டுகோளை அங்கே விடுத்தேன்.

நான் எட்டாவது ஷெட்யூல் என்பதெல்லாம், அரசியல் சட்ட 351-வது விஷயத்திற்கு உள்ள பொருளில்தான்.

எட்டாவது ஷெட்யூலில் உள்ள மொழிகள் அனைத்திலிருந்தும் இந்தி உருவாக்கப்பட வேண்டும் அப்போதுதான் அது இந்தியாவின் கூட்டுப் பண்பாட்டைப் பிரதிபலிக்க முடியும்.

எட்டாவது ஷெட்யூலில் உள்ள மொழிகள் அனைத்திலிருந்தும் இந்தி உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான் அது இந்தியாவின் கூட்டுப் பண்பாட்டைப் பிரதிபலிக்க முடியும்.

எட்டாவது ஷெட்யூலில் உள்ள மொழிகளைப் போன்றே, ஆங்கிலமும் அந்த அளவுக்கு இந்தி மொழிதான் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் பம்பாய் உயர் நீதிமன்றம், இந்தியத் தலைமை நீதிமன்றம் ஆகியவற்றின் தீர்ப்புகளை நான் மேற்கோள் காட்டினேன்.

எட்டாவது ஷெட்யூலில் உள்ள இந்திய மொழிகளைவிட சரிசமமாக ஆங்கிலம் பல வழிகளில் இந்திய மொழியாக உள்ளது இவ்வாறும் நீதிமன்றங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

ஆங்கிலம்தான் அரசியல் சட்டத்தை உருவாக்கிய மொழி; 1965-ஆம் ஆண்டுவரைக்கும் அதுவே தனியொரு ஆட்சிமொழி அதுவே நாட்டின் நிர்வாக மொழியாக இருந்திருக்கிறது. மாநிலங்களில் வேறு மொழிகள் ஆட்சி மொழிகளாகும்வரை அதுவே ஆட்சிமொழியாக இருந்திருக்கிறது; இருக்கிறது; நீதிமன்றங்கள், உயர்நீதி மன்றங்கள், தலைமை நீதிமன்றம் ஆகியவற்றின் மொழியும் அதுவே; அனைத்துச் சட்டங்களும், கட்டளைகளும் அரசினர் அறிவிப்புகளும் ஆங்கிலத்திலேயே இருக்கவேண்டியிருக்கின்றன.

1959 பிப்ரவரி இருபத்தோராம் நாள் பிரதமர் நேரு ஒரு அறிக்கை விட்டார். எட்டாவது ஷெட்யூலில் உள்ள பதினுன்கு மொழிகளோடு ஆங்கிலத்தையும் இந்தியையும் இந்தியப் பெரு மொழிகளாக சாகித்திய அகாடமி ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதை அந்த அறிக்கையில் நேரு தெரிவித்திருந்தார். நான் அதையும் மேற்கோள் காட்டினேன்.

1958-ம் ஆண்டு ஜூலை, பதினெட்டாம் நாள், கல்கத்தா பல்கலைக் கழக செனேட் ஆங்கிலமும் எட்டாவது ஷெட்யூலில் சேர்க்கப்பட வேண்டுமென்று தீர்மானித்தது.

(இவற்றையெல்லாம் சுட்டிக் காட்டிவிட்டு) நான் இறுதியாக மனிதாபிமான வேண்டுகோள் ஒன்றையும் விட்டேன்.

'ஆங்கிலம் எனது சமுதாயத்தின் மொழி; என் சமூதாயம் சிறுபான்மையானதாக அங்கீகரிக்கப்பட்டதாகும், எனவே மற்றவற்றைப் போலவே, ஆங்கிலமும் இந்திய மொழியேயாகும்.

எனவே, எவரேனும் ஆங்கிலத்தை அந்நிய மொழி என்று பேசிக் களங்கம் உண்டாக்கும்போது அது எனது சமுதாயத்திற்கு வேதனையைத் தருகிறது; அவமானத்தை உண்டாக்குகிறது.

இன்று ஆங்கிலம் பெற்று இருக்கும் நிலை வரலாற்று வழிவந்ததாகும்.

ஆங்கிலம் நிர்வாக ஐக்கியத்திற்கு இணைப்புச் சக்தியாக உள்ளது. நீதித்துறை ஐக்கியத்திற்கும் அதுவே இணைப்புச்சக்தி; குறைந்த பட்சம் படித்த பகுதியார் இடையே உணர்வு பூர்வமானதும்; அறிவுபூர்வமான ஒருமைப்பாடு நிலவுவதற்கும் அதுவெ கருவியாயிருந்திருக்கிறது,

ஆங்கிலமில்லாவிட்டால், தமிழ்நாட்டவரும், வங்காளத்தவரும், ஐரோப்பாவை விட டெல்லியில் மெத்த அந்நியர்களாய்க் காணப்படுவர்.

1959-ம் ஆண்டு ஆகஸ்டு ஏழாம் நாள் எனது தீர்மானத்திற்குப்பதிலளித்த பிரதமர் நேரு பாராளுமன்றத்தில் பேசினுர். அவரது அந்த பதில்தான் பின்னர் நேரு சூத்திரம் என்று பெயர் பெற்றது.

இந்தி பேசாத மக்கள் விரும்பும்வரை மாற்றுஆட்சி மொழியாக ஆங்கிலமே நீடிக்கும் என்பதே அந்த சூத்திரம்,

ஆங்கிலம் எட்டாவது ஷெட்யூலில் சேர்க்கப்படுவதற்கு எதிராக ஏதுமில்லையெனக் கொள்கையளவில் நேரு ஏற்றுக் கொண்டிருக்கிருர். என்ருலும் பாராளுமன்றத்தில் இந்தி வெறியர்களுக்கு உள்ள அரசியல் ஆதிக்கம் காரணமாக அவர் ஒரு சிறுபான்மை வகுப்புக்கு நியாயம் செய்ய முடியாதவராயிருக்கிருர். அந்தச் சிறுபான்மை இனம் எண்ணிக்கையில் குறைந்ததாயிருப்பதால், அரசியல் ரீதியில் உதவியற்றதாய் இருக்கிறது.

பாராளுமன்ற ஆட்சிக் குழுவின் அறிக்கை 1959 செப்டம்பரில்

பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது. அப்போது உள்துறையமைச்சரின் தீர்மானத்திற்கு நான் சில திருத்தங்களைக் கொண்டுவந்தேன். நேரு சூத்திரத்தை உறுதிப் படுத்தவே அவற்றைக் கொண்டுவந்தேன்.

முன் கூட்டியே வகுக்கப் பட்ட திட்டப்படி—இந்தி வெறியர் கூட்டம் ஒட்டு மொத்தமாக என் திருதங்களை எதிர்த்தது. அதனால் என் தீர்மானம் அவையில் அனுமதிக்கப்படக் கூடவில்லை. காங்கிரசுக்கு உள்ளும் வெளியுமுள்ள இந்தி வெறியர்கள் பற்றிய என் அச்சம்உறுதிப்படுத்தப்பட்டு விட்டது. நேரு சூத்திரத்திற்கு அவர்கள் காட்டும் அவமரியாதையும் தெள்ளத் தெளிவாக வெளியாகி விட்டது.

1959 செப்டம்பர் நான்காம் நாள். ''ஆங்கிலம் கற்று ஆட்சி மொழியாக-துணை ஆட்சி மொழியாக இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை நீடிக்கும்'' என்ற தன் சூத்திரத்தை நேறு மறுபடியும் உறுதிபடுத்தினுர்.

இவ்வாண்டு ஏப்ரல் திங்களில் பாராளுமன்றத்தில் ஆட்சி மொழி மசோதா விவாதிக்கப்பட்டபோது அடுத்த கட்டம் வந்தது.

மாநில சட்டமன்றங்களின் பரிசீலனைக்கு இம்மசோதா அனுப்பப்பட வேண்டும் என்ற என் கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டது.

நேரு சூத்திரத்தைப் பரிகாசத்திற்கு இரையாக்கவும் பலம் குறைந்ததாகவும் இந்தி வெறியர்கள் விடாப் பிடிவாதமாக நெருக்கடி தருகின்றனர். இதில் அரசு சிக்கியிருக்கிறது' என்பதை நான் அறிவேன்.

பாராளுமன்றத்தின் முன் மசோதா வைக்கப்பட்டபோது, இந்திவெறியர்கள் வென்று விட்டார்கள் என்பது தெள்ளத் தெளிவாகிவிட்டது. அவர்கள் விரும்பியதெல்லாம் மொழி மசோதாவில் இடம் பெற்று விட்டன.

நேரு சூத்திரத்திற்கு ஏதேனும் மரியாதை தரும் எண்ணம் இருந்திருக்குமேயானல், மசோதா எளிய இரு வழி அளவைகளைக் கொண்டதாக அமைந்திருக்கும். அதாவது 'இந்தி பேசா மக்கள் புறக்கணிக்கப்பட மாட்டார்கள் என்ற உறுதியோடு சட்டமன்றங்களில் பெரும் பாலானவற்ருலோ-அன்றி பாராளுமன்றப் பெரும்பான்மையாலோ, வேறு வழியாகத் தீர்மானிக்கப் படாதவரை, ஆங்கிலமே மாற்று ஆட்சி மொழியாக-துணை ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்' என்று மசோதா அமைந்திருக்கும்.

அம்மசோதாவின் மூன்ருவது பிரிவும் நான்காவது பிரிவும், சட்டமன்றங்களையும் பாராளுமன்றத்தையும்முக்கிய நோக்கத்தினின்று வேறு வழியில் திருப்பி விடுவதற்கே தாராளமாக உருவாக்கப்பட்டிருக்கின்றன.

மூன்ருவது பிரிவில் கையாளப் பட்டிருக்கும் சொற்ருெடர்கள், இந்தியைக் கொல்லைப்புற வழியாகத் திணிப்பதை உறுதி செய்துள்ளது. இது 1965-க்குப் பின்னர் இந்தியோடு ஆங்கிலமும் துணையாகப் பயன்படுத்தப்படலாம் ('மே') என்று கூறுகிறது. இது 1965-க்குப் பின்னர் ஆட்சிப் பணிகள் அனைத்திற்கும் இந்தி பயன்படுத்தப் படும் என்றும்ஆங்கிலம் உபயோகப்படுத்தப் பட்டாலும் படலாம்; படாமல் போனுலும் போகலாம்' என்றும் விதிக்கிறது. எனவே, பிரதமர் தவருக இடறிச் செல்லப் பட்டு விட்டார். என்பது தெளிவாகி விட்டது.

இவ்வாண்டு ஏப்ரல் பதினெட்டாம் நாள் எனக்குத் தீட்டிய மடலில் கூட, பிரதமர், (மே) என்ருல் 'ஷல்' என்றுதான் பொருள் என்று குறிப்பிட்டுள்ளார் ஆனல் உள்துறை அமைச்சரோ (லால்பகதூர் சாஸ்திரியாரோ) 'மே' என்பது அனுமதிப்பது என்றும் தன்னேடு ஒத்த 'மே நாட்' என்பதையும் அதுசேர்த்துக் கொண்டிருக்கிறது என்றும் தெளிவுபடுத்தி விட்டார்.

'இந்தி ஏகாதிபத்தியத்தின் பெயரால் பல தவருன வாதங்கள் புரியப்பட்டிருக்கின்றன.

ஓர் அந்நிய மொழியை ஆட்சி மொழியாகக் கொள்வது நாட்டின் தன்மானத்திற்கு எதிரானது என்று பேசப்படும் வாதம் மெத்த அறிமுகமான வாதமாகும்.

முதலில், தேசிய மொழி என்று எதற்கும் அரசியல் சட்டம் ஒரு போதும் வசதி செய்யவில்லை என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும், இந்தி ஆட்சிமொழியாக்கப் படுவதற்குக்கூட எதிர்ப்பிருந்தது. ஆனல் இந்தி வெறியர்கள், இந்த விதியைத்தான் தவருன வழியில் திருப்பிவிட்டு அரசியல் சட்டம் ஒருபோதும் கருதாத இந்தியை தேசியமொழியாவதற்குப் படிப்படியாகப் பாடுபட்டனர்.

ஆட்சி மொழி என்பதற்கும் தேசிய மொழி என்பதற்கும் பெரும் வேறுபாடு உண்டு.

கானு, அயர்லாந்து போன்ற பல நாடுகளில் அவற்றிற்கெனச் சொந்தமாக தேசிய மொழிகள் உண்டு. எனினும் அத்தோடு ஆங்கிலத்தைத் தமது ஆட்சி மொழியாகக் கொண்டிருக்கின்றன.

ஆங்கிலத்தை அந்நிய மொழி என்று கூறி அவமானப்படுத்த நினைக்கும் இந்தி வெறியர்கள் இந்தி பேசாத மக்களுக்கு இந்தி ஆங்கிலத்தைவிட மெத்த அந்நிய மொழி என்பதை மறந்துவிட்டார்கள். தமிழ் நாடு போன்ற மாநிலங்களுக்கு இந்நிலை குறிப்பாகப் பொருந்தும்.

இருநூறு ஆண்டுகளாக இந்நாட்டில் இருந்து வருவதன் காரணமாக படித்தவர்களிடையே மட்டுமின்றி படியாதோரிடமும் ஆங்கிலம் பரவியிருக்கிறது.

இந்தியின் மூலம் கல்வி புகட்டப்பட்டோர் எண்ணிக்கையைவிட ஆங்கிலம் மூலம் கல்வி கற்கப்பட்டோரின் எண்ணிக்கை, பல நூறு மடங்கு அதிகமானதாகும்.


**நவ. 8 முதல் வெளிவருகிறது!**

## " தேனமுதம் "

(தி. மு. க. வார இதழ்)

**ஆசிரியர்: கூடல் அறச்செழியன்**

கழக முன்னணித் தலைவர்களின் வாழ்த்துச் செய்தியுடன் நீட்டோலை — சுழல் விளக்கு ஆகிய பகுதிகளும் ஆசிரியரின் சரித்திரத் தொடரோவியமான சித்தன்ன வாசலும் இடம் பெறுகின்றன. இது தவிர இன்னும் எத்துணையோ அத்துணையும் கற்கண்டு — தேன்சுவை மாங்கனி!

முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எங்கும் தேவை.

விவரங்கட்கு:

'தேனமுதம்'
10, மேலநாப்பாளையத் தெரு,
மதுரை-1.


ஆங்கிலத்தைப்பற்றி ஓரளவு அறிந்திருந்தோர் எண்ணிக்கையும்கூட, இந்தியை ஓரளவு அறிந்தோர் எண்ணிக்கையைவிட அதிகமானது.

ஆங்கிலம் இந்திய மொழி மட்டுமல்ல. அது உலக மொழி. அது இந்தியைப் போன்றதில்லை. அது உலகம் பெற்றுள்ள முன்னேற்றம், சாதனைகள், அறிவு ஆகியவற்றின் கதவைத் திறந்து விடும் மொழியாகும்.

நாற்பத்து இரண்டு சதவிகித மக்களால் பேசப்படுகிறது என்கிருர்களே—அது இங்கு கிட்டி விடப்பட்ட மிகப் பெரும் அரசியல் புரளிகளுள் ஒன்ருகும்.

1951ம் ஆண்டையக் கணக்கெடுப்பில் வேறு எழுபத்தேழு மொழிகளைப் பேசுவோர் கணக்குகளும் இந்தி பேசுவோர் கணக்குடன் தாராளமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றுக்கும் இந்திக்கும் எந்தவிதத் தொடர்புமில்லை. மேற்படி எழுபத்தேழு மொழிகளுள் சில பல பேச்சு வழக்கில் மட்டும் உள்ளவை; எழுத்தற்றவை.

இவ்வாருக 1951ம் ஆண்டைய இந்தி பேசுவோர் கணக்கெடுப்பில், உருது பஞ்சாபி, ராஜஸ்தானி ஆகியவற்றைப் பேசுவோர் தொகையும் சேர்க்கப்பட்டுள்ளது.

அதே வழியால் ஆங்கிலம் அறிந்த மக்களின் கணக்கும் வெகுவாகக் குறைக்கப்பட்டு, அவர்கள் எண்ணிக்கை ஒரு கோடியே எழுபத்தோராயிரம் எனப் பதியப்பட்டிருக்கிறது.

ஆங்கிலோ— இந்தியர்களை விட்டு விடுங்கள். அவர்களைத் தவிர்த்துப் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆங்கிலத்தை தம் தாய்மொழியாகப் பெற்றிருக்கின்றனர். ஏனென்ருல், அவர்கள் ஆங்கிலத்தால் வளர்க்கப்பட்டிருக்கின்றனர்.

இந்திய மக்களுள் அரைச் சதவிகிதப் பேர்தான் புதிய இந்தியை—செயற்கையான கூத்துகளோடு அறிவர்.

இந்தி மக்களோடு தொடர்பு கொள்ள உதவும் கருவி என்பது மற்ருெரு தவருன வாதமாகும்.

இந்தி பேசாத மக்கள் நாட்டின் மக்கள் தொகையில் மொத்தப் பெரும்பான்மையினர் ஆவர்—அவர்களிடையே தொடர்பு கொள்ளும் கருவியாம் இந்தி ஒரு போதும் இருந்ததில்லை.

இந்தி பேசும் மக்களை எடுத்துக் கொண்டாலும் சரி—அவர்கள்கூட இந்தப் புதிய இந்தியை நுண்ணறிவற்றதாகவே கருதுகின்றனர். உண்மையில் மனிதனைத் தனிமையாய் ஒதுக்கும் கருவிதான் (அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கும்) புதிய இந்தி.

பலர் விரும்பத்தகாத பொருள்களின் சின்னம்தான் இந்தி!

வட இந்தியாவில் இந்தி மொழி மட்டுமில்லை; தேவநாகரி வரிவடிவமும் கூட வெட்கமின்றி மதத்தோடு தொடர்புபடுத்தப் படுகின்றன.

இந்தி, இந்து—இந்துஸ்தான்! இந்த உணர்வோடுதான் — மத வெறியோடுதான் இந்தி வெறியர்கள் இருக்கின்றனர்

சிறுபான்மையினர் மொழிகள் மீது ஏவி விடப்படும் அடக்குமுறையின் சின்னம்தான் இந்தி.

அது அநீதியின் சின்னமும் கூட.

இந்தி பேசுவோர் உண்மையில் அறிவுத் திறத்தில் நாட்டில் மெத்தவும் பின்பட்டோர். அவர்களுக்கு அரசாங்க உத்தியோகங்களில் குறிப்பாக மத்திய அரசாங்கப் பதவிகளில் ஏகபோகத்தை உண்டாக்கித் தருவது, இந்தி ஏகாதிபத்தியத்தின் ஒரு தலையாய குறிக்கோள்.

கல்வியறிவின்மை இந்திபேசும் மாநிலங்களில் அதிகமாக இருக்கிறது.

அரசாங்கப் பதவிகளுக்கான போட்டித் தேர்வுகளில், இந்தி பேசும் பகுதிக்காரர்களின் அறிவு நிலை வருந்தத் தக்கதாய் இருக்கிறது.

இந்தி பேசும் பகுதிப் பட்டதாரிகள்—வழக்கமாகவே வருந்தத்தக்க அளவு அறியாமையுடையவர்களாக இருக்கிருர்கள். ஏனென்ருல் இந்தியில் நூல்களும் அறிவுத் திறனும் குறைந்திருக்கின்றன.

இந்தி அநீதியின் சின்னமும் கூட. அது எப்படி என்ருல், வளர்ச்சியுருத அந்த மொழியை விருத்தியடையச் செய்வதற்காக, மத்திய அரசு இந்தி பேசாப் பகுதி மக்கள் தந்த வரிப்பணத்திலிருந்து நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களைச் செலவழிக்கிறது.

நாட்டின் சட்டப்பூர்வ இணைப்பைச் சிதைக்கும் சின்னமாகவும்

(9-ம் பக்கம் பார்க்க)

## முத்துராமலிங்கனர் மறைவு

விடுதலைப் போராட்டத்தின் முன்னணித் தளபதிகளில் ஒருவரும், சிறந்த பேச்சாளரும், தென்பாண்டி நாட்டின் ஒப்புயர்வற்ற தலைவராகத் திகழ்ந்தவரும், தமிழக முன்னேற்றக் கட்சித் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான திரு. பசும்பொன் முத்துராமலிங்க(தேவர்) அவர்கள் 29—10—63 அன்று காலை மதுரையில் உள்ள அவரது இல்லத்தில் இயற்கையெய்தியமை குறித்து மிகவும் வருந்துகிறோம்.

காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தைத் தட்டிக்கேட்டு, ஜனநாயகக் குரலெழுப்பிவந்த ஒரு முக்கிய எதிர்க்கட்சித் தலைவராக விளங்கிய திரு. முத்துராமலிங்கனர் அவர்களின் மறைவு ஈடுசெய்யமுடியாத ஒரு நட்டமாகும்.

இந்திய விடுதலைப் போராட்டத்திலும், தொழிற்சங்க இயக்கங்களிலும் ஈடுபாடுகொண்டு அயராது பாடுபட்ட திரு. முத்துராமலிங்கனரின் புகழ் வரலாற்றுச் சிறப்புடையதாகும்.

அன்னாரது மறைவு குறித்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும், கட்சித்தோழர்களுக்கும் நமது ஆழ்ந்த அநுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

(ஆ—ர்)

○

## வருந்துகிறோம்

வண்ணை தியாகராயர் அறநிறுவன நிர்வாகக் குழுத் தலைவரும், நீதிக்கட்சி காலந்தொட்டு அரசியல் துறையில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக அயராது பணியாற்றிவந்த பெருந்தகையும், தொடர்ந்து பல ஆண்டுகள் சென்னை மாநகராட்சியின் உறுப்பினராயும், ஒரு முறை துணைமேயராகவும் இருந்து அரிய பல தொண்டுகள் ஆற்றியவருமான திரு. சி. பார்த்தசாரதி (நாயகர்) அவர்கள் 19—10—63 சனிக்கிழமையன்று காலை இயற்கையெய்தினர் என்ற செய்தியை கேட்டு மிகவும் வருந்துகிறோம்.

மறைந்த திரு. பார்த்தசாரதி அவர்கள் சென்னை நகர மக்களுக்கும் குறிப்பாக வடசென்னையின் ஏற்றத்துக்கும் ஆற்றியுள்ள பணி அளவிடற்கரியது.

வட சென்னையில் அமைந்துள்ள சர். தியாகராயர் கல்லூரியின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அவரது தொண்டு பெரிதும் துணையாக இருந்தது என்பது மிகையல்ல. கல்லூரியின் முன்னேற்றத்திற்கு அவரது பணி மேலும் துணைபுரியும் வகையில் இருந்த நிலையில் சற்றும் எதிர்பாராத வகையில் அவர் மறைந்தது ஈடு செய்ய முடியாத இழப்பு ஆகும்.

அன்னார் மறைவு குறித்து நாம் வருந்துவதுடன், அவரது குடும்பத்தாருக்கும்; நண்பர்களுக்கும் கல்லூரி நிர்வாகிகள்—ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(ஆ-ர்)

## சி. பார்த்தசாரதி மறைவுக்கு இரங்கல்

——(0)——

வண்ணை- தியாகராயர் கல்லூரி அறநிலையங்களின் நிர்வாகக் குழு தலைவர் திரு. சி. பார்த்தசாரதி அவர்கள் 19—10—63 அன்று இயற்கையெய்தினுர்கள்.

ஏராளமான நண்பர்களும், சர்வ கட்சித் தோழர்களும், கல்லூரி—உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களும், மாணவர்களும் தங்களது இறுதி மரியாதையைத் தெரிவித்தனர்.

தி. மு. கழகத்தின் சார்பாக 'நம் நாடு' பொறுப்பாசிரியர் திரு- காஞ்சி. கல்யாணசுந்தரம் அவர்கள், மறைந்த பார்த்தசாரதி அவர்களுக்கு மாலையணிவித்து இறுதி வணக்கம் செலுத்தினுர்.

தியாகராயர் அற நிறுவன நிர்வாகக் குழு உறுப்பினர் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களும், இல்லத்திற்கு வந்து தமது இறுதி மரியாதையைச் செலுத்தினுர்.

அன்று மாலை நடைபெற்ற இறுதி ஊர்வலத்தில் ஏராளமான பொதுமக்களும், மாணவர்களும், ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

மயானத்தில் நடைபெற்ற இரங்கற் கூட்டத்தில், கல்லூரி முதல்வர் கே. இராசகோபால் எம். ஏ. உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் சாம்ராஜ் பி. ஏ. எல்' டி., திருவாளர்கள் பி. எம். லிங்கேசன் வி. சுந்தரமூர்த்தி (செட்டியார்) பழைய மாணவர்கள் சார்பில் என். வி. என். சோமு, இந்நாள் மாணவர்கள் சார்பில் காசிநாதன், தியாகராசன், மற்றும் பெரியோர்கள் அன்னாரது பணிகளையும் தொண்டுகளையும் எடுத்துக் கூறி, இறுதி வணக்கம் செலுத்தினர்.

6ம் பக்கத் தொடர்ச்சி

இந்தி இருக்கிறது. ஆட்சிமொழி ஆணைக்குழுவும் பாராளுமன்ற ஆட்சி மொழிக்குழுவும் பலபரிந்துரைகளைச் சொல்லியிருக்கின்றன. ஆனுல், அவற்றுக்கு மாருக தலைமை நீதிமன்ற மொழியாகவோ—இந்தி பேசா மாநிலங்களின் உயர்நீதிமன்ற மொழியாகவோ, இந்தி ஆகமுடியாதென்பதை நான் உறுதியாகக் கூறுகிறேன்.

இந்தி வெறியர்கள் ஒன்றை விரும்பும் முன்பு தம்மை அதற்குத் தக்கவர்களாக ஆக்கிக் கொண்டிருக்க வேண்டும். இந்தி பேசும் மாநில அரசுகள் கூட இந்தியைப் பயன்படுத்துவதில் உண்மையான முன்னேற்றத்தைக் காண முடியாதனவாய் இருக்கின்றனவே! மாநிலங்களுக்குள்ளேயே இந்தி அகரவரிசைகூட இன்னும் இறுதி வடிவம் பெறவில்லையே! இந்தி பேசும் மாநிலங்களுக்குள்ளேயே, இந்தியின் பொருள்கள் மாறுபட்டிருக்கின்றனவே!

டாக்டர் சுனித்குமார் சட்டர்ஜி இந்திய மொழி இயலில் புகழ் பெற்றவர் அவர் சுட்டிக்காட்டியதுபோல, தற்போது அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வளர்க்கப்படும் கடிபோலி இந்தி தோன்றியதே, 1850-க்குப் பின்னர்தான்! அது 1850-க்கு முன்னர் இருந்ததில்லை!

புகழ் பெற்ற ஓர் இந்தியர் சொன்னதுபோல், இந்திக்கு நிர்வாக மரபு கிடையாது. ஏனென்ருல், இந்திய வரலாற்றில் இந்தியை ஆட்சிமொழியாகக் கொண்ட மாநிலம் ஏதும் இருந்ததே இல்லை.

இந்தி ஏகாதிபத்தியவாதிகள், தாம் கனவு காண்பதுபோல், செயற்கையாக ஓர் இந்தி மொழியையும், இந்திப் பேரரசையும் நிறுவ இப்போது முனைகின்றனர்.

இந்தி அழிவின் சின்னமுமாகும், கல்வித் துறையில் அறிவியலில், அரசியலில் இந்தியாவைக் குறைந்தது ஆயிரம் ஆண்டுகளாகிலும் பின்நோக்கித் தள்ளுவது தான் இந்தித் திணிப்பின் பொருள்.

புதிய ஏகாதிபத்தியங்கள் அனைத்தையும் போன்றே. இந்தி ஏகாதிபத்தியமும் ஊட்டப்படுவதன் மூலம் வளர்கிறது. மத்திய அரசாங்கத்தில் அரசியல் முக்கியத்துவத்தை அனுபவிப்பதால், இந்தி வெறியர்கள் ஓங்கி வெறித்தனமாகக் கத்துகின்றனர்.

இந்தி வெறியர்கள் தாக்குகிருர்கள்; அவமானப்படுத்துகிருர்கள் —அவற்றிலிருந்து, குடியரசுத் தலைவராலும் சரி; கவர்னர்களாலும் சரி, யாராலும் தப்ப முடியவில்லை.

இன்றையத்தினம் இந்தி ஏகாதிபத்தியமே மிகப்பெருங் கேடு. நாட்டின் முன்னேற்றத்திற்கும் ஐக்கியத்திற்கும் எற்பட்டுள்ள மிகப் பெரிய அபாயம் அதுதான்.

—என்று, 25—10—63 அன்று

## பம்பாய்-மாதுங்கா

6—10—63 இரவு பத்துமணியளவில் "தென்னவர் கலை மன்ற"த் துவக்க விழா திரு. கோமதிமணாளன் தலைமையில் நடைபெற்றது.

அதுபோது மன்றத்திற்கு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். அவைத் தலைவர்-துணைத் தலைவராக முறையே கோமதி மணாளன்—சேரை முத்தையாவும் செயலாளர்—துணைச் செயலாளராக வி. எஸ். நாதன், கே. எம். துரையும், பொருளாளராக ஆர். கிருஷ்ணனும், தணிக்கையாளராக சேரை-இரத்தினகுமாரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயற்குழு உறுப்பினர்களாக எஸ். பி. வாசன், கே. சேரன், எம். மணி, மற்றும் ஏழு பேரடங்கிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மன்றத்தின் முதல் நாடகமாக சிறுகதைச் செல்வன் சேரை. இரத்தினகுமார் எழுதிய "இதுதான் உலகம்" என்ற நாடகத்தை அடுத்த திங்களில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

சேரனின் இன்னிசைக்குப் பின் கே. எம். துரை நன்றி நவில கூட்டம் இரவு இரண்டு மணிக்கு முடிவுபெற்றது.

## வருந்துகிறோம்

சென்னை நக்கீரர் கழகப் பொதுச் செயலாளரும், திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி இயக்குநருமாகிய திரு. சிறுவை. நச்சினுர்க்கினியர் அவர்களது அருமை அன்னையார் திருமதி. கோதைநாயகி அம்மையார் அவர்கள் அண்மையில் மறைந்த செய்தி கேட்டு பெரிதும் வருந்துகிறோம்.

அருமை அன்னையாரை இழந்து துயருறும் சிறுவை நச்சினுர்க்கினியர் அவர்களுக்கும், அவர்தம் குடும்பத்தார்க்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும் உரிதாக்கிக் கொள்கிறோம்.

(ஆ-ர்.)

ஃ

குடியாத்தம் நகர் 'திராவிடன்' விற்பனையாளர் திரு. பி. ஜி. ராசன் அவர்களது இரண்டாவது மகன் ஆதிச்செழியன் சென்ற 27—10—63 ஞாயிறன்று இயற்கையெய்திய செய்தி கேட்டு மிகவும் வருந்துகிறோம். மகவை இழந்து துயருறும் தோழர் ராசன் அவர்களுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

(ஆ-ர்.)

ஆட்சிமொழி பிரச்சினை பற்றி சென்னை செயிண்ட் மேரிஸ் மண்டபத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் தோழர். பிராங்க அந்தோணி அவர்கள் குறிப்பிட்டார்.

2-ம் பக்கத் தொடர்ச்சி ... ... ... ...

ஐ நா மன்றம், இலங்கை அரசை அப்படி செய்யாதிருக்கும்படி கேட்டுக் கொள்ளும் அவ்வளவு தான்!

மனித உரிமையை அளிக்கும் துலாக்கோல் அரசிடம் இருக்கிறது; ஆனல் அந்த துலாக் கோலைப் பிடித்திருக்கும் கரங்கள் அழுக்குப் பட்டிருக்கின்றன!

எனவே இந்த மக்கள் உரிமைக் கழகம் ஒரு துலாக் கோலாக இருக்க வேண்டும்.

இந்தக் கழகத்தில் இருப்பவர்களுக்குக் கட்சியில் பற்று, பாசம் இருக்கலாம் ஆனல் அதைவிட, பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து பார்த்து அவற்றிற்குப் பரிகாரம் தேடுவதில் அக்கரை காட்ட வேண்டும். இந்த காரியத்தை சட்ட நிபுணர்கள் தான் இருந்து கவனிக்கவேண்டும் என்பதில்லை; எல்லோரும் சட்டத்தை ஆராயலாம்.

சட்டத்துறையினர் மட்டுமின்றி பேராசிரியர்களும் ஓய்வு பெற்ற நிர்வாகத்துறையினரும் வேறு துறைகளைச் சேர்ந்தவர்களும் கூடி வருங்காலத்தில் ஏற்படும் ஒவ்வொரு பிரச்சினையையும் ஆராயும் ஒரு நடுநிலைக் கழகமாக இது அமையவேண்டும் என்று விரும்புகிறேன்.

உரிமைகள் என்பது விரும்பிய போது தந்து, வேண்டாம் என்று அரசு நினைக்கும்போது பறித்துக் கொள்ள நிலாச் சோறு அல்ல.

மக்களுடைய அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப் படவேண்டும் ஆட்சியாளாகள் தங்கள் விருப்பம்போல மக்களுடைய உரிமைகளை மறுக்க முயல்வது தவருகும்.

எண்ண உரிமை, எழுத உரிமை, பேச உரிமை கூட்டம் கூட உரிமை போன்ற அடிப்படை உரிமைகளை அரசு பறித்துக் கொள்வதால் ஜனநாயகம் வளர முடியுமா?

மக்கள் உரிமைக் கழகம் ஆட்சியில் இருப்பவர்களுக்கு வலுவூட்டக்கூடிய அமைப்புதான். ஆட்சியாளர்கள் தவறு செய்யும்போது அதை எடுத்துக்கூறி அவர்கள் திருந்த வகை செய்யுமே தவிர அவர்களை எதிர்க்க அல்ல! அந்தப் பணியை செய்பவன் நான்.

அக்கிரமத்திற்குத் துணை போகாத நெறி ஆட்சியாளர்களுக்கு இருக்கவேண்டும். திருட்டுப் புத்தியோடு மக்களுடைய உரிமைகளை அழிக்க நினைத்தால் ஜனநாயகம் வளர முடியாது.

திராவிட முன்னேற்றக் கழகம் அழிந்துவிட்டால் நான் மக்கள் உரிமைக் கழகத்தை எடுத்து வைத்துக் கொள்வேன் என்று யாரும் தவருக எண்ண வேண்டாம். திராவிட முன்னேற்றக் கழகம் அழியாது!

முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி இராசமன்னர் அண்மையில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் உரிமைகள் தேவைதான் என்றும் ஆனல் சமுதாயத்திற்குக் கேடு பயக்காத வகையில் கட்டுப்பாடுடன் இருக்கவேண்டும் என்றும் கூறியுள்ளார். இது ஒத்துக் கொள்ள வேண்டியதுதான்.

ஆனல் அந்த உரிமைகளை சமுதாயத்திற்கு கேடு பயக்கிறது என்று ஆட்சி பீடத்தில் உள்ளவர்கள் சொல்வதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? ஆட்சியில் உள்ளவர் சமுதாயத்தின் நாடி நரம்பை உணர்ந்தவர்கள் என்பதை எப்படி ஒத்துக்கொள்வது?

சட்டத்துறை நிபுணர்கள்—நடுநிலையாளர்கள் — அனுபவமிகுந்தவர்கள்—எந்தக் குழுவில் நமக்கு இடம் கிடைக்கும் என்று ஆட்சியாளர்களை எதிர்பார்க்காதவர்கள் ஆகியோர் அடங்கிய குழு ஆராய்ந்து சொன்னல் அதில் பொருளுண்டு. அதை நான் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் தலை வணங்கி வரவேற்பேன்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானல் ஆளும் கட்சியான காங்கிரஸ் சமதர்மக் கொள்கையை திட்டமாக ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே காங்கிரசுக் கட்சியை சேர்ந்தவர்கள் அதர்மத்தால் சகல நோயும் தீரும் என்று தத்துவம் பேசுகிருர்கள்.

சமதர்மக் கொள்கையை ஏற்பதற்கு முன்னல் உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்று கூறியவுடன், காங்கிரசுக்காரர்கள் சொன்னர்கள் "உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ருல் ஏறுபவனுக்கு ரயில் சொந்தமா? பஸ் சொந்தமா? குடியிருப்பவனுக்கு வீடு சொந்தமா? வேலை செய்பவனுக்கு கடை சொந்தமா?" என்று கேட்டார்கள்.

அப்படி கேட்டவர்கள் தான் பிறகு சமதர்மக் கொள்கையின் சிறப்பைப் பற்றி பேசுகிருர்கள்.

சமுதாயத்திற்கு எது நல்லது என்று உணர்ந்து தங்களை மாற்றிக் கொண்டதுபோல தாங்கள் செய்யும் தவறுகளிலிருந்து ஆட்சியாளர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முன்வர வேண்டும்.

---

## அடுத்த இதழ்
### 10—11—63

அண்ணு அவர்களின் சொற்பொழிவு

அண்ணுவுடன் நான்

தோழர் கதிரன் தீட்டும் கட்டுரை,

காஞ்சித்தலைவன் விமர்சனம்

ஆகியவற்றுடன் வெளிவரும்.

---

## ஏஜெண்டுத் தோழர்களுக்கு

அக்டோபர் மாதம் முடிய பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. உடன் அதற்கான தொகையை தவருது அனுப்பிவைக்க வேண்டுகிருேம்.

நிர்வாகி: 'திராவிடன்'

---

# புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.
## சர். தியாகராயர் கல்வி அற நிறுவனத் தலைவரானுர்.

——(0)——

சென்னை சர், தியாகராயர் கல்வி அற நிறுவனத்தின் தலைவராகப் புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் எம். எல். சி. அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பது சென்னை நகர மக்களுக்கும், குறிப்பாக வட சென்னை வாசிகளுக்கும் மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

வட சென்னையின் வளர்ச்சிக்கே அடிப்படையாக விளங்கும் சர். தியாகராயர் கல்லூரியின் முன்னேற்றத்தில் நிரம்ப அக்கறை கொண்ட ஒருவர் அக்கல்லூரியின் நிர்வாகக் குழுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது கல்லூரியின் நல்ல எதிர்காலத்தையே எடுத்துக் காட்டுகிறது.

தியாகராயர் கல்லூரியின் வளர்ச்சியில் என்றைக்குமே பொதுமக்களுக்கும்—கலைஞர்களுக்கும் நிறம்ப அக்கறை இருந்து வந்திருக்கிறது.

அறிஞர் அண்ணு அவர்கள் கல்லூரியின் ஆரம்ப காலந்தொட்டு இன்றுவரை பலப்பல வகைகளில் அதனுடைய வளர்ச்சிக்கு வழிகாட்டி, உதவி வருகிருர் என்பதும், புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் பல கலை நிகழ்ச்சிகள் மூலம் கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவி வருகிருர் என்பதும் அனைவருமே நன்கறிவர்.

புரட்சி நடிகரின் கொடையுள்ளத்தைப் பாராட்டியும், அவரைசிறப்பிக்கும் பொருட்டும், கல்லூரி நிர்வாக குழுவில் அவரை உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தும் இன்று, தங்களது தலைவராக ஒரே மனதாக அவரைத் தேர்ந்தெடுத்த நிர்வாகக்குழு உறுப்பினகள் அனைவராலும் பாராட்டப் படுகிருர்கள்.

இதுவரை இந்த நிர்வாகத்திற்குத் தலைவராக இருந்த திரு. பார்த்தசாரதி (நாயகர்) அவர்கள் இயற்கையெய்தியதை அடுத்து, தலைவர் பதவிக்கான தேர்தல் 27—10—63 அன்று நடைபெற்றபோது, திரு. டி. கோவிந்தசாமி எம். சி. முன்மொழிய, திரு. சம்பந்தப்பா, எம். சி. வழிமொழிய எம். ஜி. ஆர். போட்டியின்றி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கல்லூரியின் முன்னுள் முதல்வர் மறைந்த பேராசிரியர் எம். கே. சண்முகம் எம்.ஏ.எல்.டி. அவர்கள் தியாகராய கல்லூரி நிகழ்ச்சிகளில் அடிக்கடி,

"புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் இருக்கும் வரை நம் கல்லூரியை யாராலும் அசைக்க முடியாது என்று நான் அறைந்து கூறுவேன்" — என்று தனக்கே உரித்தான ஆணித்தரமான பாணியில் கூறுவார்.

பேராசிரியர் எம். கே. சண்முகம், நிர்வாகக் குழுத் தலைவராக இருந்து அண்மையில் மறைந்த திரு. பார்த்தசாரதியார் ஆகியே இருவரும், நிர்வாகக் குழுவினர்—ஆசிரியர்கள்—மாணவர்கள் ஆகியோரின் ஒத்துழைப்போடு கல்லூரியை உயர்த்த மிகவும் அரும்பாடு பட்டனர்.

தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் எம். ஜி. ஆர். அவர்கள், தன்னுடைய பதவிக்காலத்தில் கல்லூரியின் பொற்காலத்தை உருவாக்கிக் காட்டுவார் என்ற நம்பிக்கை நமக்கெல்லாம் இருக்கிறது.

நீதிக்கட்சித் தலைவராக விளங்கிய வெண்ணுடை வேந்தர் தியாகராயரின் திருப்பெயரால் அமைந்திருக்கும் சர். தியாகராயர் கல்லூரியில் நடுத்தர வசதி பெற்றவர்களும்—பிற்படுத்தப்பட்ட மாணவர்களும்தான் அதிகம் பயில்கின்றனர்.

வடசென்னையில் அமைந்திருக்கும் இந்தக் கல்லூரி மேலும் விரிவுபடுத்தப்பட்டால், அந்தப் பகுதியில் இருந்து சென்னை நகரின் பல பகுதிகளுக்கும், கல்வி கற்கச் செல்லும் மாணவர்களின் நேரத்தையும், பெற்ருேர்களின் தேவையற்ற பணச் செலவையும் குறைக்கலாம்.

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களுக்கு இந்த விவரங்கள் நன்கு தெரியும் என்றே கருதுகிருேம். அதற்கேற்ப அவர் கல்லூரியின் வளர்ச்சி குறித்து நிச்சயம் பணியாற்றுவார் என்றும் எதிர்பார்க்கிருேம்.

தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட எம். ஜி, ஆர். அவர்களை மனப்பூர்வமாகப் பாராட்டுகிருேம்.

ஆசிரியர், வெளியிடுபவர், என். வி. நடராசன், அச்சிடுபவர், புவனேசுவரி-நடராசன்—சோமு அச்சகம், 16, இப்ராகீம் சேட் தெரு, சென்னை-1